FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8319458

1. District : திருப்பூர் PS: உ.கு.காவல் Year: 2026 FIR No.: 14/26/AC (TPR Date:
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு மு.த.அ. எண் நாள் 24.09.2026

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Sections பிரிவுகள்: U/S 7
(ii) Act சட்டம்: (Amendment) Act 2018 Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: The Bharatiya Nyaya Sanhita 2023 Sections பிரிவுகள்: U/S 49
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : 22.09.26 Date to : 22.09.26
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை
Time Period : Time from : 15.00 hrs Time to : 23.50 hrs.
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை

(b) Information Received at PS. Date : Time :
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்

(c) General Diary Reference : Entry No(s) Time :
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் கணினியில் புகார் தயாரிக்கப்பட்டது

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் 12 கி.மீ மேற்கில்

Beat Number : (b) Address : அவினாசி நகராட்சி அலுவலகம். கிழக்கு எண்.10,
முறைக் காவல் எண் முகவரி கச்சேரி வீதி, அவினாசி, திருப்பூர் மாவட்டம்

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : தி.மு.வாலிபன் (b) Father's/ Husband's Name :
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : (d) Nationality : இந்தியன் (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : அலுவலகம் (g) Address : கோயம்புத்தூர் மாவட்டம், திருப்பூர் மாவட்டம்
தொழில் முகவரி இணை மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கோயம்புத்தூர்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1) தி.மு. அவினாஷ் (41/26) S/o. P. வேலுசாமி, திருப்பூர் மாவட்டம் அவினாசி நகராட்சி அலுவலகம். அவினாசி RI திருப்பூர் மாவட்டம். செல். எண் 3 இணைக்கப்பட்டுள்ளது
2) தி.மு. P. ரங்கசாமி (63/26) S/o பழனிசாமி கோவை மாவட்டம். அவினாசி நகராட்சி அலுவலகம் அவினாசி RI திருப்பூர் மாவட்டம். செல். எண் இணைக்கப்பட்டுள்ளது

8. Reasons for delay in reporting by the complainant / Informant: அவினாசி RI திருப்பூர் மாவட்டம். செல். எண்
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் 27 நாட்கள் கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது. [illegible]

கையெழுத்து

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10 Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12 FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித் தாளில் இணைக்கப்பட்டது.

13 Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

24/04/26

24/04/2026

14 Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

24/04/2026 at 13.00 hrs

Name: பெயர் ...
Rank: நிலை ... No. எண் ...

திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.14/2026/AC/TPR, u/s.7 of the Prevention of Corruption (Amedment) Act, 2018 r/w 49, Bharatiya Nyaya Sanhita, 2023 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் வரிசை எண் –12 இன் விபரம்.,

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது

இன்று 24.09.2026 ஆம் தேதி 09.30 மணிக்கு கோயம்புத்தூர், ஈரோடு, திருப்பூர் மற்றும் நீலகிரி மாவட்டங்கள், மாவட்ட ஆய்வுக்குழு ஆய்வாளர், திரு. பூ. விஜயகுமார், என்பவர் திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் ஆஜராகி கொடுத்த கணினியில் தட்டச்சு செய்யப்பட்ட புகாரின் விபரம் பின்வருமாறு: அனுப்புநர் திரு. பூ. விஜயகுமார், மாவட்ட ஆய்வுக்குழு ஆய்வாளர், கோயம்புத்தூர், ஈரோடு, திருப்பூர், மற்றும் நீலகிரி மாவட்டங்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கோயம்புத்தூர். பெறுநர் காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருப்பூர். ந.க.எண்.176/2026/ஐ2, நாள்: 23.09.2026. அய்யா, பொருள்: ஆய்வுக்குழு – திடீர் சோதனை – 22.09.2026 ஆம் தேதி மாலை 15.10 மணி முதல் 23.50 வரை அவினாசி நகராட்சி அலுவலகத்தில் திடீர் சோதனை மேற்கொண்டது – குற்றவியல் தொடர்புள்ள நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுதல் – தொடர்பாக. திருப்பூர் மாவட்டம், அவினாசி தாலுக்கா, கச்சேரி வீதி, கதவு எண்.10 என்ற முகவரியில் செயல்பட்டுவரும் அவினாசி நகராட்சி அலுவலகத்தில் பணிபுரியும் அலுவலக பணியாளர்கள் அவினாசி நகராட்சி அலுவலகத்தில் கழிவு நீர் கால்வாய்கள் சுத்தம் செய்வதற்கு ஜே.சி.பி பயன்படுத்துவது, முள் புதர்களை அகற்றுவது, குடிநீர் விநியோக குழாய்களை பழுது பார்த்தல், தெரு விளக்குகளை பராமரித்தல், கழிவு நீர் கால்வாய்கள் கட்டுதல் போன்ற ஒப்பந்த பணிகளுக்கு ஒப்பந்ததாரர்களிடமிருந்து கமிசன் மற்றும் கையூட்டு பெறுவதாகவும், அந்த தொகையை நேரடியாகவும், G Pay மூலமாகவும் கேட்டு பெறுவதாகவும் கிடைக்கப்பெற்ற நம்பத்தகுந்த ரகசிய தகவலின் பேரில் 22.09.2026 ஆம் தேதி மாலை 15.10 மணி முதல் 23.50 மணி வரை திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணைக் கண்காணிப்பாளர் மற்றும் குழுவினருடன் இணைந்து அவினாசி நகராட்சி அலுவலகத்தில் திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது. இந்த திடீர் சோதனையின்போது அந்த அலுவலகத்தில் பணியில் இருந்த திரு. அரவிந்த் அவர்களிடம் விசாரித்தபோது அவர் தான் கடந்த 07.02.2009 ஆம் தேதி துப்புரவு ஆய்வாளராக சென்னை மாநகரட்சியில் மண்டலம் –3ல் வேலைவாய்ப்பு அலுவலகம்

மூலம் அரசு பணியில் சேர்ந்து 2018 ம் ஆண்டு வரை சென்னையில் பணிபுரிந்ததாக கூறினார். அதன்பின்பு 2018ம் வருடம் முதல் 2024ம் வருடம் வரை கோயமுத்தூர் மாநகராட்சியிலும், அதன் பின்பு 27.07.2025ம் தேதி வரை திருப்பூர் மாநகராட்சியிலும் பணிபுரிந்து கடந்த 28.07.2025ம் தேதி முதல் அவிநாசி நகராட்சி அலுவலகத்தில் துப்புரவு ஆய்வாளராக பணிபுரிந்து வருவதாகவும், தனது சொந்த ஊர் தேனி மாவட்டம், பெரியகுளம் வட்டம், ஜி.கல்லுப்பட்டி கிராமம் என்றும், தனது பணியானது துய்மை பணியை கண்காணிப்பது மற்றும் சுய உதவிக்குழு ஊழியர்களுக்கு சம்பளம் வழங்க பரிந்துரை செய்வது, கழிவு நீர் கால்வாயை ஆய்வு செய்தல், பிறப்பு இறப்பு பதிவு செய்வது, தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் மற்றும் புகையிலை சம்மந்தமாக கடைகளில் ஆய்வு செய்வது, நோய் தடுப்பு பணி, தொழில் உரிமம் பெற பரிந்துரை செய்வது, துய்மை பணி சம்மந்தமாக ஒப்பந்ததாரர்களுக்கு பில் தொகை விடுவிக்க பரிந்துரை செய்வது, மயானம் மற்றும் மின் மயானம் கண்காணிப்பு போன்றவைகள் தனது பணிகளாகும் என்று கூறினார். மேலும் சோதனை குழுவினர் தங்களை அறிமுகம் செய்து கொண்டு சோதனை செய்த போது தன்னிடமிருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அதில் ரூ.200/– நோட்டுகள் 9 எண்ணிக்கையிலும், ரூ.100/– நோட்டுகள் 17 எண்ணிக்கையிலும், ரூ.50/– நோட்டுகள் 7 எண்ணிக்கையிலும், ரூ.20/– நோட்டுகள் 5 எண்ணிக்கையிலும், ரூ.10/– நோட்டுகள் 3 எண்ணிக்கையிலும் என மொத்தம் ரூ.3,980/– இருந்தது. அந்த பணம் தனது சொந்த செலவிற்காக எடுத்து வந்த பணம் என்று கூறியதால் அந்த பணத்தை அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அதன் பிறகு அவரின் செல்போனை பெற்று மின்னனு பண பரிவர்த்தனைகளை ஆய்வு செய்யப்பட்டது. அவை கோவை காந்திபுரம் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி கிளை கணக்கு எண்.007501000049419, IFSC IOB0000130 (Salary Account) மூலம் பரிவர்த்தனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் கடந்த 01.01.2026 ஆம் தேதி முதல் தற்போது வரை சில பெயர்களில் சந்தேகப்படும்படியாக G-Pay–யில் பணம் மொத்தம் ரூ.5,53,767/– இந்த காலகட்டத்தில் பெறப்பட்டுள்ளது. அதன் விவரம்.

S.No.	Transaction Date	Name of the Sender as Per UPI	Amount
1.	05.01.2026	Dhanasree	Rs.8,500/-
2.	08.01.2026	Thirumoorthy Thangavel	Rs. 7,000/-

3.	31.01.2026	Niranjana Sivasubramanian	Rs. 75,000/-
4.	04.02.2026	Mahalakshmi P	Rs. 9,500/-
5.	05.02.2026	Thirumoorthy Thangavel	Rs. 5,000/-
6.	11.02.2026	Thirumoorthy Thangavel	Rs. 5,000/-
7.	28.02.2026	Mahalakshmi P	Rs. 17,600/-
8.	01.03.2026	Dhanasree R	Rs. 11,000/-
9.	03.03.2026	Thirumoorthy Thangavel	Rs. 5,000/-
10.	04.03.2026	Vidhya V	Rs. 3,000/-
11.	06.03.2026	Yuvakumar	Rs.3,000/-
12.	09.03.2026	Anitha M.F.	Rs. 10,000/-
13.	19.03.2026	Thirumoorthy Thangavel	Rs. 5,000/-
14.	22.03.2026	Balasubramanian	Rs. 970/-
15.	26.03.2026	Mahalakshmi P	Rs. 10,000/-
16.	27.03.2026	Prakasu	Rs. 5,000/-
17.	03.04.2026	Mahalakshmi P	Rs. 17,800/-
18.	04.04.2026	Thirumoorthy Thangavel	Rs. 5,000/-
19.	07.04.2026	Dhanasree R	Rs. 10,000/-
20.	21.04.2026	Karuppasamy V	Rs. 18,000/-
21.	21.04.2026	Sampathkumar G	Rs. 20,000/-
22.	22.04.2026	Thenmozhi R	Rs. 2,000/-
23.	22.04.2026	Bologna Italian Restrant	Rs. 65,400/-
24.	22.04.2026	Rajangam	Rs. 25,850/-
25.	29.04.2026	Sankar G	Rs. 25,000/-
26.	04.05.2026	Selvakumar	Rs. 5,000/-
27.	05.05.2026	Dhanasree	Rs. 8,500/-
28.	09.05.2026	Thirumoorthy Thangavel	Rs. 5,000/-
29.	18.05.2026	Sivasankar	Rs. 3,000/-

30.	21.05.2026	Ramakrishnan T	Rs. 27,900/-
31.	01.06.2026	Mahalakshmi P	Rs. 18,200/-
32.	03.06.2026	Thirumoorthy Thangavel	Rs. 5,000/-
33.	04.06.2026	Dhanasree	Rs. 9,000/-
34.	06.06.2026	Murugesan	Rs. 500/-
35.	10.06.2026	Sivaguru Earth Movers	Rs. 6,000/-
36.	12.06.2026	Thirumoorthy Thangavel	Rs. 5,000/-
37.	27.06.2026	Logu	Rs. 5,000/-
38.	07.07.2026	Mahalakshmi P	Rs. 18,400/-
39.	08.07.2026	Anu nandhini	Rs. 500/-
40.	12.07.2026	Sudha S	Rs. 5,000/-
41.	14.07.2026	Shanmugasundaram Chinnan	Rs. 2,000/-
42.	01.08.2026	Mahalakshmi P	Rs. 18,600/-
43.	04.08.2026	Balasubramanian	Rs. 8,500/-
44.	30.08.2026	Mahalakshmi P	Rs. 2,000/-
45.	01.09.2026	Mahalakshmi P	Rs. 18,800/-
46.	18.09.2026	Selvakumar P	Rs. 12,247/-
Total			**Rs.5,53,767/-**

அந்த பரிவர்த்தனைகள் பற்றி அவரிடம் விசாரித்தபோது அவர் தனது உறவினர்களுடன் தனது சொந்த வரவு செலவுகள் செய்துள்ளதாக கூறினார். அவர் கூறிய காரணம் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இல்லாமல் உள்ளது. மேலும் மேற்படி தொகைகள் அனைத்தும் அவரது வங்கி கணக்கிற்கு வந்துள்ள விதம் சந்தேகத்திற்கு இடமளிக்கும் வகையில் உள்ளது. மேலும் இவருக்கு RBL வங்கி கோயம்புத்தூர் லட்சுமி மில்ஸ் கிளையில் ஒரு சேமிப்பு கணக்கு ஒன்று உள்ளதாகவும் அந்த கணக்கு எண் **309002939623** என்றும் தெரிவித்தார். மேலும் பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்யும் பிரிவு அறையில் இருந்த **(1)** K.EASWARAN ARASAN (Spectic Tank Cleaning Service) 1/785, P.S.K. Complex, Velaydasamy Kalyanan Mndapam (Back Side),

Pazhavanjipalayam Road, Tiruppur – 641608, (2) SIVAGURU EARTH MOVER 6/114-C, Post Office Street, Near Telephone Exchange Main Road, AVINASHI-641654 - 2 Books, (3) D.H. ENGINEERING & TRADERS, 4/61, Extension Street, Kaikattipudur, AVINASHI -641 654, Tiruppur – Dt., (4) K.EASWARAN ARASAN (Spectic Tank Cleaning Service) 1/785, P.S.K. Complex, Velaydasamy Kalyanan Mndapam (Back Side), Pazhavanjipalayam Road, Tiruppur – 641608, (5) NSV Water Agency, Gandhipuram, Avinashi மற்றும் (6) சங்கீதா வாட்டர் சப்ளையர்ஸ், காமராஜ் வீதி, அவிநாசி – 641 654 ஆகிய பில் புத்தகங்களை பற்றி அவரிடம் விசாரித்தபோது அவர் மேற்கண்ட பில் புத்தகத்திற்கான உரிமையாளர்கள் தங்கள் அலுவலகத்தில் சுய உதவி குழு மூலம் பணிபுரியும் திருமதி.ரம்யாவிடம் கொடுத்து எழுதி கொடுக்க சொல்லியிருப்பார்கள், அதனால் அவர் வாங்கி வைத்திருக்கலாம் என்று தெரிவித்தார். மேற்கண்ட பில் புத்தகங்களை அலுவலகத்தில் வைத்திருப்பதற்கான முகாந்திரம் இல்லாததால் அந்த பில் புத்தகங்களை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் அலுவலகத்தின் பின்பக்கம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த அவரின் Honda Amaze TN 42 AU 5712 என்ற பதிவெண் கொண்ட காரில் சோதனை செய்தபோது அங்கு சந்தேகப்படும்படியான பொருளோ அல்லது பணமோ காணப்படவில்லை. அந்த கார் வாங்குவதற்கு துறைரீதியான அனுமதி பெறப்பட்டுள்ளதா என்று விசாரித்தபோது அவ்வாறு அனுமதி எதுவும் பெறவில்லை என்றும் தனது மனைவியின் நகைகளை வங்கியில் அடமானம் வைத்து அந்த தொகையில் கார் வாங்கியதாக கூறினார். அவரது மனைவியின் நகைகளை சொத்து விவர பட்டியலில் துறைக்கு தெரிவிக்கப்பட்டுள்ளதா என்று கேட்டபோது அவ்வாறு எதுவும் தெரிவிக்கவில்லை என்று கூறினார். மேலும் அவரது மனைவியின் நகைகளை வங்கியில் அடமானம் வைத்து கடன் வாங்க துறைரீதியான அனுமதி எதுவும் பெறவில்லை என்றும் கூறினார். மேலும் அவரை விசாரித்து ஒரு வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. பின்னர் சோதனை குழுவினர் அவினாசி நகராட்சி அலுவலக மேலாளர் திரு.P.செல்வகுமார் மற்றும் அலுவலக பணியாளர்களிடம் விசாரணை மேற்கொண்டு சோதனை செய்தனர். விசாரணையில் திரு.P.செல்வகுமார் தான் கடந்த 05.11.2007ம் தேதி இளநிலை உதவியாளராக பொள்ளாச்சி நகராட்சியில் பணியில் சேர்ந்ததாகவும், அதன் பிறகு கடந்த 28.02.2016 ஆம் தேதி உதவியாளராக

பதவி உயர்வு பெற்று காங்கேயம் நகராட்சியில் பணிபுரிந்ததாகவும் தெரிவித்தார். மேலும் கடந்த 02.03.2026 ஆம் தேதி மேலாளராக பதவி உயர்வு பெற்று அன்றைய தேதி முதல் இந்த அலுவலகத்தில் பணிபுரிந்து வருவதாகவும் தெரிவித்தார். மேலும் இந்த அலுவலகத்தில் தற்போது ஆணையாளர் பணியிடம் 01.08.2026 முதல் காலியாக உள்ளதாகவும், திருமுருகன்பூண்டி ஆணையாளர் திரு. எம். பாலமுருகன் அவர்கள் கூடுதல் பொறுப்பில் உள்ளதாகவும், அவர் இன்று காலை அலுவலகம் வந்து விட்டு மதியம் சுமார் 2 மணியளவில் சென்றுவிட்டதாகவும் தெரிவித்தார். பின் அவரை சோதனை செய்த போது அவர் அவரிடமிருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அதில் ரூ.200/– நோட்டு ஒன்றும், ரூ.100/– நோட்டுகள் 3 எண்ணிக்கையிலும், ரூ.50/– நோட்டு ஒன்றும், ரூ.20/– நோட்டுகள் 8 எண்ணிக்கையிலும், ரூ.10/– நோட்டு ஒன்றும் என மொத்தம் ரூ.720/– இருந்தது. அந்த பணம் குறித்து அவரிடம் விசாரித்தபோது அவர் தனது சொந்த செலவிற்காக எடுத்து வந்த பணம் என்று கூறியதால் அந்த பணத்தை அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. மேலும் தனி நபர் பண இருப்பு பதிவேடு பற்றி கேட்டபோது தங்கள் அலுவலகத்தில் தனி நபர் கையிருப்பு பதிவேடு எதுவும் பராமரிக்கப்படுவதில்லை என்று தெரிவித்தார். அதன் பிறகு அவரிடமிருந்த செல்போனை பெற்று மின்னனு பண பரிவர்த்தனைகளை ஆய்வு செய்த போது அவரின் யூனியன் பேங்க் ஆப் இந்தியா காங்கேயம் வங்கி கிளை கணக்கு எண். 501000338207 23 ஆகும். அந்த செல்போனை ஆய்வு செய்தபோது கடந்த 22.08.2026ம் தேதி Sudha Hasini என்பவரிடமிருந்து ரூ.1,00,000/– அவரது கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது. அது பற்றி அவரிடம் விசாரித்த போது அவரது அம்மா பார்வதி அவர்கள் திருப்பூர், லட்சுமி நகரில் செயல்பட்டு வரும் அம்மன் பைனான்ஸ் என்ற தனியார் நிதி நிறுவனத்தில் சீட்டு போட்டு வருவதாகவும், அந்த பணத்தை அவரது குடும்ப ஆக்டிங் டிரைவராக வேலை செய்யும் கிஷோர் தனது அம்மாவிடமிருந்து பெற்று தனக்கு அனுப்பி வைத்திருந்ததாகவும் தெரிவித்தார். அப்போது சாட்சி முன்னிலையில் திரு. கிஷோர் என்பவரின் செல் எண் 7010781814 யை திரு. செல்வகுமாரின் செல்போனில் இருந்து பெற்று காவல் ஆய்வாளர் அவர்கள் தொடர்பு கொண்டு பேசியபோது திரு. கிஷோர் காங்கேயத்தில் குடியிருந்து வருவதாகவும், தான் திரு. செல்வகுமாருக்கு அவ்வப்போது கார் ஓட்டுனராக இருந்து வருவதாகவும், தான் திரு. செல்வகுமாரிடம் தேவைக்கு ஏற்ப கடன் பெற்று மீண்டும் திருப்பி கொடுத்து

வருவதாகவும், கடைசியாக கடந்த ஜீன் மாதம் திரு. செல்வகுமாருக்கு தான் வங்கி பரிவர்த்தனை மூலமாக தொகை அனுப்பியதாகவும், அதற்கு பிறகு தொகை எதுவும் அனுப்பவில்லை என்றும் தெரிவித்தார். எனவே திரு. செல்வக்குமாரின் கணக்கிற்கு ரூ.1 லட்சம் தொகை வரவு வந்ததற்கு அவர் கூறிய காரணம் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இல்லை. மேலும் திடீர் சோதனையின் போது நகராட்சி அலுவலகத்தில் வருகைப்பதிவேடு நகல் எடுக்கப்பட்டு மேலாளர் அவர்களிடம் சான்றொப்பம் பெறப்பட்டு வருகைப்பதிவேடு பக்கம் 1 முதல் 38 வரை உள்ளது விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் அவர் ஆஜர் செய்த Avinashi Municipality Bank Receipt Voucher (BRV) dated 21.09.2026 பக்கம் 1 முதல் 6 வரையிலானது மற்றும் Avinashi Municipality Bank Receipt Voucher (BRV) dated 22.09.2026 பக்கம் 1 முதல் 4 வரையிலானது ஆகியவைகளின் கணிணி பிரிண்ட் அவுட் சான்றிட்ட நகல் மற்றும் அவினாசி வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தின் பணியாளர்களுக்கு 2026–27–ம் அரையாண்டு தொழில் வரி செலுத்துவதற்கான கடிதம் சான்றிட்ட நகல் பக்கம் 1 முதல் 4 வரையிலான ஆவணங்கள் அனைத்தும் மேலாளரால் சான்று செய்யப்பட்டு விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேற்படி திடீர் சோதனையின் போது அவினாசி நகராட்சி அலுவலகத்தில் இருந்த மேற்படி (1) திரு.V.அரவிந்த் (46/2026), த/பெ.P.வேலுசாமி, துப்புரவு ஆய்வாளர், அவினாசி நகராட்சி அலுவலகம், அவினாசி தாலுகா, திருப்பூர் மற்றும் (2) திரு.P.செல்வகுமார் (43/2026), த/பெ.பழனிச்சாமி, மேலாளர், அவினாசி நகராட்சி அலுவலகம், அவினாசி தாலுகா, திருப்பூர் ஆகியோர்களது வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. இதர விவரங்கள் குறித்து திடீர் சோதனையின்போது தயார் செய்யப்பட்ட எனது நடவடிக்கைகள் மற்றும் நடவடிக்கை சமயத்தில் பெறப்பட்டுள்ள வாக்குமூலங்களில் விரிவாக கூறப்பட்டுள்ளது. மேற்கண்ட நடவடிக்கை குறிப்பு, பெறப்பட்ட வாக்குமூலங்கள் மற்றும் கைப்பற்றப்பட்ட ஆவணங்களை தங்களிடம் ஆஜர் செய்கிறேன். இந்த நிகழ்வு குறித்து உண்மை நிலை அறிய தக்க புலன் விசாரணை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு Sd XXXXX 24.9.26 (பூ. விஜயகுமார்). Sir, Received the complaint along with proceedings, and statements today on 24.09.2026 at 09.30 hrs and registered a case in Tiruppur Vigilance Anti-Corruption Cr.No.14/2026/AC/TPR u/s 7 of the Prevention of Corruption (Amendment) Act, 2018 r/w 49, Bharatiya Nyaya Sanhita, 2023 today at 11.15 hrs

and I took up investigation. Sd XXXXX 24.09.2026 N.K.Ravichandran, Deputy Superintendent of Police, V&AC, Tiruppur.

Original FIR along with original computer typed complaint, proceedings and statements recorded by Tr.P.Vijayakumar, District Inspection Cell Inspector, Coimbatore, Erode, Tiruppur and Nilgiris Districts is submitted to the Hon'ble Principal District and Session Judge, Principal District and Session Court, Tiruppur and a copy of FIR is submitted to the Director, Vigilance and Anti-Corruption, Chennai.

(N.K.RAVICHANDRAN)
Deputy Superintendent of Police,
Vigilance and Anti-Corruption,
Tiruppur.